

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2052 நவம்பர் 25, 2021 புரட்சி 20 முழக்கம் 39 விலை: ரூ.3.00

## முதல் கட்ட சந்திப்பில் கழகத் தோழர்கள் உற்சாகம்

# கிராமங்களில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை

***கழகத் தோழர்களை பொறுப்பாளர்கள் சந்தித்து நிகழ்த்திய கலந்துரையாடல் நிகழ்வுகள் தோழர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்துள்ளன. கிராமங்களில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை நடத்தவும், 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு உறுப்பினர்கள் சேர்க்கவும் தோழர்கள் முனைப்புடன் செயல்பட முன் வந்துள்ளனர்.***

***முதல்கட்டப் பயணத்தில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன், தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார் பங்கேற்றனர். விரைவில் இரண்டாம் கட்டப் பயணம் தொடங்கவிருக்கிறது. பயணம் குறித்து விழுப்புரம் அய்யனார் தொகுத்து அனுப்பியுள்ள செய்தி.***

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா பெரும் தொற்றால் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்ததோடு, இயக்க செயல்பாடுகளும் ஒரு சில நிகழ்வுகள் தவிர்த்து இணைய வழியில் மட்டுமே நடைபெற்று வந்தன. இயக்கப் பணிகள் சுணக்கம் ஆகிவிட்டன. இதனைப் போக்கும் வகையில் கழகப் பணிகளை தீவிரப்படுத்தும் கழக ஏடான, புரட்சிப் பெரியார் முழக்கம், நிமிர்வோம் ஏட்டிற்கு சந்தா சேர்த்திடவும், முதல் கட்டமாக 18.11. 2021 முதல் 20.11.2021 வரை கழகப் பொருளாளர் திருப்பூர் துரை சாமி, பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன், தலைமைக் குழு உறுப்பினர் விழுப்புரம் அய்யனார், திருப்பூர் அய்யப்பன் ஆகியோர்கள் மாவட்டந்தோறும் தோழர்களைச் சந்தித்தனர்.

**மதுரை :**

முதலாவதாக 18.11.2021 வியாழக்கிழமை அன்று காலை 11 மணியளவில் மதுரை மாவட்டத் தோழர்களை தளபதி இல்லத்தில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில் மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டியன், மாவட்டச் செயலாளர் மணி அமுதன், நகர செயலாளர் செந்தில், தளபதி, செந்தில் ஆகியோர் பங்கேற்றனர். தோழர்களுடன் பயணக் குழுவினர் கழக ஏடுகளுக்கு சந்தா சேர்ப்பது, கடந்த கால செயல்பாடுகள் எதிர்வரும் காலங்களில் கழக செயல்பாடுகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டது. இந்த சந்திப்பு மதியம் ஒரு மணி வரை நடந்தது. மதிய உணவுக்குப் பிறகு சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு சென்றனர்.

**காரைக்குடியில் :**

மாலை 5 மணியளவில் காரைக்குடி நேஷனல் பள்ளியில் தோழர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்டத் தலைவர் முத்து, மாவட்டச் செயலாளர் முத்துக்குமார் உள்பட தோழர்கள் பலர் பங்கேற்றனர் 3 புதிய தோழர்களும் பங்கேற்றனர். 7 மணிவரை கலந்துரையாடல் நடைபெற்றது. பயணக் குழுவினருக்கு இரவு தங்குவதற்கு மற்றும் இரவு காலை உணவுகளுக்கு முத்து ஏற்பாடு செய்தார்.

**பேராவூரணியில் :**

19.11.2021 வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் தஞ்சை மாவட்டம் பேராவூரணி பேருந்து நிலையம் எதிரில் பெரியார் அம்பேத்கர் வாசகர் வட்ட கட்டிடத்தில் நடந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் திருவேங்கடம், மாவட்ட அமைப்பாளர் பாரி, மாவட்ட அறிவியல் மன்ற அமைப்பாளர் கலையரசன், ஆசிரியர் உதயகுமார் உள்பட பல்வேறு பகுதியில் இருந்து தோழர்கள் பலரும் பங்கேற்றனர். மதியம் ஒரு மணி வரை கூட்டம் நடைபெற்றது மதிய உணவு திருவேங்கடம் ஏற்பாடு செய்தார்.

இதனைத் தொடர்ந்து நாகை மாவட்டம் நாகூரில் மாலை 4 மணி அளவில் கழகத்திற்கு தொடர்ந்து ஆதரவாக செயல்பட்டு வரும் பெரியார் அம்பேத்கர் தோழமை வட்டம் தோழர்களை சந்தித்தனர். இச்சந்திப்பில் 20 தோழர்கள் பங்கேற்றனர் பயணத்தின் நோக்கம் குறித்தும் கடந்த காலங்களில் கழகம் எடுத்த முக்கிய போராட்டங்கள் குறித்தும் இல்லம் தேடி கல்வி, திராவிடர் தமிழர், ஜெய் பீம் குறித்துக் கழகத்தினர் நிலைப்பாடு என்று கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரை செயலாளர் பிரபாகரன் தலைமைக் குழு உறுப்பினர்கள் மயிலாடுதுறை இளைய ராஜா, விழுப்புரம் அய்யனார், மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் மகேஷ் ஆகியோர் கருத்துரை வழங்கினர். கருத்துரையை பகிர்ந்து கொண்ட தோழர்கள் புரட்சிப் பெரியார் முழக்கம் சேர்த்து தருவதாக உறுதி யளித்தனர். இந்நிகழ்வை தலைமைக்குழு உறுப்பினர் இளையராஜா மாவட்டச் செயலாளர் மகேஷ், செந்தில் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

**மயிலாடுதுறையில் :**

இதையடுத்து இரவு 7 மணி மயிலாடுதுறை தோழர் விஜியின் புத்தக சோலை மேல் தளத்தில் கலந்தாய்வு நடைபெற்றது. கலந்தாய்வுக் கூட்டத்தில் தலைமைக்குழு உறுப்பினர் இளையராஜா, மாவட்டச் செயலாளர் மகேஷ், மாவட்ட பொருளாளர் விஜயகுமார், நகர மன்ற அமைப்பாளர் செந்தில், தஞ்சை மாவட்டத் தலைவர் சாக்கோட்டை இளங்கோவன், சோலை மாரியப்பன் உள்பட 30 பேர் பங்கேற்றனர். கழக ஏடுகளுக்கு சந்தா சேர்த்தல் கழக செயல்பாடுகள் அரசியல் நிலைப்பாடுகள் குறித்து பேசப்பட்டது. இரவு கூட்டம் நிறைவு பெற்றது. பயணக் குழுவினர் இரவு தங்குவதற்கு தோழர்கள் இரவு உணவு மற்றும் காலை உணவு மாவட்டக் கழக பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்தனர்.

**கருவேப்பிலங்குறிச்சியில் :**

தொடர்ந்து 20.11.2021 சனிக்கிழமை அன்று காலை 10 மணியளவில் கடலூர் மாவட்டம் கருவேப்பிலங்குறிச்சி வசந்தம் திருமண மண்டபத்தில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. தோழர்களிடம் பயணத்தின் நோக்கத்தைக் குறித்து உரையாற்றியப் பின் மாவட்டக் கழக பொறுப்பாளர்களை, கழக பொருளாளர் திருப்பூர் துரைசாமி அறிவித்தார். மாவட்டத் தலைவர் சிதம்பரம் அ.மதன்குமார், மாவட்டச் செயலாளர் கடலூர் இரா. சிவக்குமார், மாவட்ட அமைப்பாளர் அ. ஆசிய ஜோதி, மாவட்டத் துணை தலைவர் எல் பிரகாஷ், மாவட்டத் துணைச்செயலாளர் கருவேப்பிலங்குறிச்சி சே. சூர்யா, மாவட்ட அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் பா. அறிவழகன், மங்கனூர் ஒன்றிய அமைப்பாளர் பார்த்திபன் ஆகியோருக்குப் பொறுப்புகள் அறிவிக்கப் பட்டது. இக்கூட்டத்தில் 25 தோழர்கள் பங்கேற்றனர். வேலை மற்றும் கல்லூரியின் காரணமாக பல தோழர்களால் பங்கேற்க முடியவில்லை. மதியம் ஒரு மணிவரை கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**பெரம்பலூர் :**

இதனை அடுத்து பிற்பகல் 3 மணியளவில் பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப் பாளர்கள் மாவட்ட அமைப்பாளர் துரை தாமோதரன், சுதாகர் ஆகியோரை சந்தித்து பயணத்தின் நோக்கத்தை விளக்கினர். மதிய உணவு துரை தாமோதரன் ஏற்பாடு செய்தார்.

**திருச்சி :**

அடுத்து மாலை 5 மணி அளவில் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் சகிலா விடுதியில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி, மாவட்டச் செயலாளர் மனோகரன், பொறுப்பாளர்கள் டார்வின் தாசன், அசோக் குமரேசன், ஆறுமுகம், மணிகண்டன் ஆகியோர் பங்கேற்றனர். இரவு 7 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது (முதல் கட்ட பயணம் நிறைவு)

**பயணத்தில் :**

2 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு தலைமை கழக பொறுப்பாளர்கள் மாவட்டக் கழகத் தோழர்களை சந்தித்ததால் மிகவும் உற்சாகமாக இருந்தனர். அனைத்து மாவட்டத்திலும் புதிய தோழர்கள் சிலர் வந்திருப்பதால் கூடுதல் மகிழ்ச்சி.

கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த் திற்கு சந்தா சேர்த்து நீண்ட இடைவெளி ஆகி விட்டதால் இந்த ஆண்டு கூடுதல் சந்தா சேர்த்து தருவதாக தோழர்கள் உறுதி யளித்தனர்.

பயணம் சென்ற அனைத்து மாவட்டங் களிலும் இந்த ஆண்டு ஜாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டப் பிரிவு நகல்களை போர்க்குணமிக்க பெரியாரின் கருஞ்சட்டைப் படை எரித்து சென்ற நவம்பர் 26 வெகு சிறப்பாக மக்களிடத்தில் போராட் டத்தின் நோக்கத்தை விளக்க துண்டறிக்கை கொடுப்பதாக அறிவித்துள்ளனர். கிராமப்புற பிரச்சாரங்களை முன்னெடுப்போம் என்றும் பிரசாரங்களுக்காக பெரியாரின் போராட்டம் குறித்து சிறிய வெளியீடுகள் வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர். இல்லம் தேடி கல்வி கழகத்தின் பார்வை ஜெய் பீம் படம் குறித்து விமர்சனங்களுக்கு கழகத் தலைவரின் மிக அழுத்தமான பதிலைக் தோழர்கள் வரவேற்றனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

**தலையங்கம்**

# அதிகார ஆணவத்தை தகர்த்தது, மக்கள் சக்தி

விவசாயிகளின் சக்தி, அரசு அதிகாரத்தைப் பணிய வைத்துவிட்டது. ஓராண்டு காலமாக கொட்டும் பனியில் இரவு பகலாக அமைதி வழியில் போராடிய விவசாயிகளின் கோரிக்கை மூன்று வேளாண் சட்டங்களை நீக்கம் செய்ய வேண்டும் என்பது தான். விவசாயம் – மனு சாஸ்திரத்தால் பிராமணர்களுக்கு தடை செய்யப்பட்ட சூத்திரர்களுக்கான தொழில். எனவே விவசாயத்தில் கார்ப்பரேட்டுகளை நுழைக்கத் துடிக்கிறது ‘இந்துத்துவா’ ஆட்சி. டெல்லியில் தொடங்கிய போராட்டம், பஞ்சாப், அரியானா, மேற்கு உத்திர பிரதேசம் என்று விரிவடைந்து நாடு தழுவிய போராட்டமாகி உலக அளவில் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் ஆணவத்தை வெளிச்சப்படுத்தியது என்றே கூறலாம்.

இந்த சட்டம் நல்ல சட்டம் என்றும், இதன் பயன்களை விவசாயிகளின் ஒரு பிரிவினருக்கு புரிய வைக்க முடியாத நிலையில் திரும்பப் பெறுவதாகவும் மோடி அறிவித்திருப்பது, விவசாயிகளை புரியும் திறனற்றவர்கள் என்று அவமதிப்பதாகும். ஆனாலும் விவசாயப் பொருள்களுக்கு குறைந்தபட்ச விலையை உறுதிப்படுத்தும் சட்டம் கொண்டு வரப்பட்டு, விவசாயத்தோடு தொடர்புடைய மின்சார சட்டம் விலக்கப்பட்டு விவசாயிகளோடு பேச்சுவார்த்தைக்கு முன் வரவேண்டும் என்ற கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று போராட்டத்தை வழி நடத்திய பாரதிய கிசான் யூனியன் தலைவர் ராகேஷ் திக்காயத் அறிவித்துள்ளார்.

சீக்கியர்களின் மத குரு குருநானக் பிறந்த நாளைத் தேர்வு செய்து, மோடி இந்தப் ‘பின்வாங்கும்’ அறிவிப்புக்குப் பின்னணியில் அரசியல் காரணங்கள் இருப்பதை மறுக்க முடியாது.

உ.பி. சட்டமன்றத் தேர்தல் விரைவில் வர இருக்கிறது. மேற்கு உ.பி.யில் முசாபர் பகுதியில் இந்து–முஸ்லிம் மோதல்களை திட்டமிட்டு உருவாக்கி, ‘இந்து’ வாக்கு வங்கியை கட்டமைத்த பா.ஜ.க.வுக்கு விவசாயப் போராட்டம் நெருக்கடியை உருவாக்கியது. ‘விவசாயிகள்’ என்ற அடிப்படையில் மதப் பகைமையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, இரு பிரிவினரும் போராட்டக் களத்துக்கு வந்து விட்டனர்.

லக்கிப்பூர் பகுதியில் நடந்த விவசாயப் பேரணியின்போது, உ.பி. மாநிலத்தைச் சார்ந்த உள்துறை இணை அமைச்சர் அஜித் மிஸ்ராவின் மகன் அஜய் மிஸ்ராவும் அவரது ஆட்களும் தனது தந்தையான ஒன்றிய அமைச்சரின் பாதுகாப்புக்கான வாகனத்தை விவசாயிகள் மீது பின்னாலிருந்து மோதியதில் நான்கு விவசாயிகள் கொல்லப்பட்டனர். அமைச்சர் மகனுடன் வந்த மூன்று பா.ஜ.க.வினரும் பலியானார்கள். ராமன் காஷ்யாப் என்ற பத்திரிகையாளர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமைச்சரின் மகனைக் காப்பாற்ற முயன்றது உ.பி. பா.ஜ.க. ஆட்சி. உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்த போது நீதிமன்றம் இதில் மிகவும் கடுமை காட்டி, ஒரு குறிப்பிட்ட குற்றவாளியை குற்றமற்றவர் என்று நிரூபிக்கும் நோக்கத்துடனேயே சாட்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று குற்றம்சாட்டியதோடு ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்க உ.பி. மாநில ஆட்சிக்கு உத்தர விட்டது.

பத்திரிகையாளர் மீது பாய்ந்த துப்பாக்கிக் குண்டு அஜிஸ் மிஸ்ரா துப்பாக்கியிலிருந்து வெடித்தது தான் என்று தடயவியல் சோதனை உறுதிப்படுத்தியது. அவரது நண்பர் அன்கிட் தாஸ் என்பவரும், சுட்டிருப்பதை சோதனை உறுதி செய்தது. இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலை உ.பி.யில் பா.ஜ.க. மீது மக்களின் எதிர்ப்பை அதிகரிக்கச் செய்து விட்டது.

ஊழலுக்கு அப்பாற்பட்ட ஆட்சி என்ற மோடியின் பிம்பமும் சரியத் தொடங்கிவிட்டது. ரஃபேல் ஜெட் விமானங்களை பிரான்ஸ் நாட்டின் ‘தாசல்ட் ஏவியேஷன்’ என்று தனியார் நிறுவனத்திடமிருந்து ஜெட் விமானம் வாங்கியதில் இந்தியாவைச் சார்ந்த இடைத் தரகர் சுஷேன் குப்தா வழியாக கமிஷன் கை மாறியதாக பிரான்ஸ் நாட்டு ஏடான ‘போர்ட்டல் மீடியா பார்ட்’ ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியிருக்கிறது. 2018 அக்டோபரில் ஒப்பந்தம் இறுதியான நிலையில் ‘கமிஷன்’ பணம் இரகசியமாக கைமாறியதற்கான ஆவணங்கள் இந்திய அமுலாக்கத் துறை வசம் இருப்பதாக பிரான்ஸ் நாட்டு பத்திரிகை அம்பலப் படுத்தியிருக்கிறது. கடந்த அக்டோபரில் நடந்த மூன்று நாடாளுமன்றம் மற்றும் 30 சட்டமன்றத்துக்கான இடைத் தேர்தல் முடிவுகளும் பா.ஜ.க.வின் செல்வாக்கு வடமாநிலங்களில் மங்கி வருவதை உறுதிப்படுத்தியிருக்கிறது. இந்தப் பின்னணியில்தான் மோடி விவசாய சட்டங்களை திரும்பப் பெறும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதிகார ஆணவத்தை மக்கள் சக்தி தகர்த்தெறிந்திருக்கிறது.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

# ஜாதிவெறி சக்திகளுக்கு எதிராக நடிகர் சூர்யாவுக்கு கழகம் துணை நிற்கும்

சூர்யாவுக்கு எதிராக ஜாதி வெறியை தூண்டி வன்னிய மக்களை அவருக்கு எதிராக நிறுத்த முயல்கிறார்கள் சனாதன சக்திகள்.

உண்மையில் இது பழங்குடியின மக்களின் வலிகளை சொல்லும் ஜெய் பீம் திரைப்படத்திற்கு ஆதரவாக நிற்கும் பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்சிய முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கு எதிராக வன்னிய மக்களை திருப்பிவிட வேண்டும் என்ற பூநூல்கள் பின்புலத்திலிருந்து இயக்கும் வேலை.

இதில் அன்புமணியும் தன் சுய நல அரசியலை செய்கிறார். நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல் மூலம் தங்கள் கட்சிக்கு பெரும்பான்மை வன்னிய சமுதாய மக்களின் ஆதரவு இல்லை என்கிற உண்மை நிலையால் எதையாவது செய்து தன்னை அரசியலில் முன்னிலைப்படுத்த முனையும் தந்திர முயற்சியே இது.

தியேட்டரை கொளுத்துவேன் என்று சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் காடுவெட்டி குருவின் மருமகனுக்கு அக்னியில் பிறந்ததாக சொல்லப்படும் புராணக்கதை என்னவென்றுகூடத் தெரியவில்லை.

புரட்சியாளர் அம்பேத்கர் சொல்லுவார் “ஜாதி என்பது ஒரு மனநோய்”. இவர்கள் மனநோயால் பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களை இயக்குவது பார்ப்பன சனாதன சக்திகள்தான் என்பதை அனைவரும் அறிவோம்.

சூர்யா அவர்களுக்கு, ஜெய் பீம் படத்திற்கு ஆதரவாகவும், அவருக்கு ஜாதி வெறியர்கள் விடுக்கும் மிரட்டல்களுக்கு எதிராக அவருக்கு பாதுகாப்பாகவும் நிற்க வேண்டியது நம் கடமை.

பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீடு உரிமையை RSS பாஜக அரசு முற்றிலுமாக பறித்தபோது - தியேட்டரை கொளுத்துவேன், சூர்யாவை அடித்தால் ஒரு லட்சம் பரிசு என அறிவிக்கும் இந்த ஜாதி மக்களின் பாதுகாவலர்கள்(?) எல்லாம் எங்கு போனார்கள்? ஏன் கூட்டணி தர்மம் தடுத்ததா?

இது ஒரு திரைப்படம் குறித்த சர்ச்சை அல்ல. பழங்குடியின மக்களுக்கு ஆதரவாக அரசு இயந்திரங்களின் ஒடுக்குமுறை குறித்து எடுக்கப்பட்ட ஒரு திரைப்படத்திற்கு எதிரானதுதான் இந்த சட்டம் ஒழுங்கை சீர் குலைக்கும் ஜாதி வெறியர்களின் அறிவிப்புகள்.

மக்கள் ஆதரவோடு சமூக நீதி களத்தில் பெரும் முற்போக்கு மாற்றங்களை செய்துவரும் திமுக அரசிற்கும் இதன் மூலம் சிக்கலை உருவாக்குவதும் இவர்களின் நோக்கம்.

இவர்கள் சர்ச்சையாக்கிய அந்த குறிப்பிட்ட காட்சியை நீக்கி விட்ட பின்பும் மீண்டும் மீண்டும் இவர்கள் இதனை ஒரு பேசு பொருளாக ஆக்கி கொண்டிருப்பது இவர்கள் உள்நோக்கத்துடன் வேறு திட்டத்துடன் செயல்படுகிறார்கள் என்பதை நம்மால் எளிதாக புரிந்துகொள்ள முடியும்.

சூர்யா ஜாதியை மறுத்து, மதத்தை மறுத்து திருமணம் செய்தவர். கல்விக்காக அறக்கட்டளை நடத்தி வருபவர். அதன் மூலம் ஏழை எளிய மக்களின் குழந்தைகளுக்கு கல்வி கற்க உதவிகளை செய்து வருபவர். நீட், புதிய கல்வி கொள்கைகளின் தீமைகளை மக்களிடம் பேசியவர். இவை அனைத்தும் முழுக்க முழுக்க காவிகளின் மனுவிய செயல் திட்டத்திற்கு எதிரானவை.

அதனால் அவர்கள் நேரம் காலம் பார்த்து காத்திருந்து ஒரு திரைப்படத்தின் காட்சியை பயன்படுத்தி வன்னிய மக்களையும், சூர்யா அவர்களையும் அவருக்கு ஆதரவாக நிற்கும் முற்போக்கு சக்திகளையும் எதிரெதிரே நிறுத்தி கலவரத்தை உண்டு பண்ணி தமிழ்நாட்டை வன்முறைக்காடாக ஆக்கும் முயற்சியே அன்றி வேறல்ல .

பாஜக கூட்டணியை குளிர்விக்கவும், பாஜக அரசின் கொடுமைகளை மக்கள் கவனத்திலிருந்து திசைமாற்ற செய்யும் வேலையாகத்தான் இதை பார்க்க முடிகிறது. இப்போதைய சூழலில் சூர்யா அவர்களுக்கு நாம் துணை நிற்போம் இதில் நடக்கும் நூலிபான்களின் அரசியலை நாம் முதலில் அறிந்து கொள்வோம். மக்களிடம் இச்செய்திகளை கொண்டு செல்வோம்.

## வினா – விடை

- வன்னியர்களை அவமதித்து படமெடுத்த சூர்யாவுக்கு 5 கோடி இழப்பீடு கேட்டு பா.ம.க நோட்டீஸ்.
  **– செய்தி**

  பா.ம.க. நிறுத்திய வன்னியர் வேட்பாளர்களைத் தோற்கடித்து அவமானப்படுத்திய வாக்காளர்களுக்கும் நோட்டீஸ் அனுப்புங்க. அப்பதான் புத்தி வரும்.

- இராம பக்தர்களுக்கான சிறப்பு இரயிலில் பணியாளர்கள் காவி உடை, உத்திராட்சை மாலை அணிவது எங்களை புண்படுத்துகிறது.
  **– சாதுக்கள் எதிர்ப்பு**

  அப்ப, ‘அனுமான்’ வேடம் தான் போட வேண்டும்.

- சைவ உணர்வாளர்களின் மனம் புண்படுவதால் மீன், இறைச்சியை வெளிப்படையாக உண்பதற்கு குஜராத்தில் அரசு தடை.
  **– செய்தி**

  இது அநியாயம் ! சிறுபான்மை சைவ இந்துக்களை அசைவத்துக்கு மாறச் சொல்லுங்க. பெரும்பான்மை தான் ‘இந்து’ க்களுக்கு முக்கியம்.

- விவசாய சட்டங்களில் ‘ஒரு கமா, புள்ளி’ யைக் கூட மாற்ற மாட்டோம்.
  **– பாஜக அண்ணாமலை.**

  சொன்னதை அப்படியே நிரூபிச்சுட்டீங்க... கமா, புள்ளியை மாற்றாமல் சட்டத்தையே ஓரங்கட்டிட்டீங்க...

- மும்மொழித் திட்டத்தை எதிர்க்கும் சூர்யா தனது படத்தை 5 மொழிகளில் எடுக்கலாமா ?
  **– எச். இராஜா**

  எடுக்கவே கூடாது ; அதோடு – இந்தி பேசும் மாநிலங்களுக்குக் கூட பயணம் போக கூடாது. நல்ல அறிவுக் கொழுந்து சார் நீங்க...

## தொழிற்சங்கம் பற்றி ஒரு சிறுகதை !



நான் ஒரு சிறுகதை கேள்விப்பட்டிருக்கின்றேன். ஒரு குளத்திலுள்ள தவளைகள் ஒன்று சேர்ந்து தங்களுக்கு ஒரு தலைவர் வேண்டும் என்று கடவுளைக் கேட்டதாகவும், கடவுளும், ஒரு மரக்கட்டையைத் தலைவராகக் கொடுத்ததாகவும், அம் மரக்கட்டை ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்ததாகவும், பிறகு தவளைகள் கடவுளிடம் எங்களுக்குக் கொடுத்தத் தலைவர் உபயோகமில்லையென்றும் வேறு தலைவர் வேண்டுமென்று கேட்டதாகவும், கடவுள் ஒரு பாம்பைக் கொடுத்ததாகவும், அப்பாம்பு தினம் 10 தவளைகளைத் தின்று வந்ததாகவும், பிறகு தவளைகள் கடவுளை நோக்கி தங்களுக்குக் கொடுத்த தலைவரை எடுத்துக் கொள்ளும்படி வேண்டி, தங்களது காரியத்தை வேறொரு தலைவரில்லாமல் பார்த்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. அதுபோல, உங்களிலேயே உங்களுக்குத் தலைவர்களும், காரிய தரிசியும், நிர்வாகிகளும், கிடைக்கவில்லையானால் கண்டிப்பாய் உங்களுக்கு சங்கம் வேண்டாம்.

**‘குடிஅரசு’** 30.05.1926

# ஆர்.டி.அய். சட்டத்தைக் குலைத்த ஒன்றிய ஆட்சி

***பிரிட்டிஷ் ஆட்சி – காங்கிரஸ் ஆட்சி காலங்களில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாறு களைத் தொடர்ந்து இத்தொடரில் – அதைவிட மோசமாக பா.ஜ.க. ஆட்சியின் ‘இருண்டகால’ வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.***

தலித் மக்களின் வளர்ச்சிக்கான நிதியை படிப் படியாகக் குறைத்த மோடி ஆட்சி, மாணவர் கல்விக்கான உதவித் தொகையிலும் கை வைத்தது. தலித் மக்கள் மீதான தாக்குதல்களும் அதிகரித்தது.

பட்டியல் இனப் பிரிவு மேம்பாட்டுக்காகவும் நலனுக்காகவும் அவர்களுக்கான மக்கள் தொகை அடிப்படையில் ஒவ்வொரு துறை யிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் பா.ஜ.க. ஆட்சியில் நிதி ஒதுக்கீடு மிக மிகக் குறைவு என்பதையே புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. 22.5 சதவீத நிதி ஒதுக்கீட்டுக்கு பதிலாக 2014-15ஆம் ஆண்டுக்கு 8.79 சதவீதம்; 2015-16இல் 6.63 சதவீதமும், 2016-17இல் 7.06 சதவீதமும், 2016-17இல் 8.91 சதவீதமும், 2017-18இல் 6.55 சதவீதமும் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டன. மிகக் குறைவாக ஒதுக்கப்பட்ட நிதியும் கூட பட்டியலினப் பிரிவினருக்கு நேரடியாகப் பயன்தரக் கூடிய திட்டங்களுக்கு செலவிடப்பட வில்லை.

ஏற்கனவே அமுல்படுத்தி வரும் பட்டியல் இனப் பிரிவினருக்கான நல்வாழ்வுத் திட்டங் களை செயற்படுத்துவதற்கான நிதியும் மோடி ஆட்சியில் கணிசமாக வெட்டப்பட்டது. தனித் தனியாக நேரடி பயன்தரக்கூடிய திட்டத் துக்கான நிதி ஒதுக்கீட்டில் 50.69 சதவீதமும், பொதுவான சமூகநலத் திட்டங் களுக்கு 49.3 சதவீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதாவது தேவையான முழு ஒதுக்கீட்டில் பாதியளவு கூட ஒதுக்கப்படவில்லை. அது மட்டுமின்றி பட்டியலினப் பிரிவுனருக்காக ஒதுக்கப்பட்ட நிதியை வேறு திட்டங்களுக்கு மடை மாற்றமும் செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து ரூ. 6312 கோடியை நோய் தடுப்புத் திட்டத்துக்கும், 244.50 கோடியை காற்றாலை மின் உற்பத்தி திட்டத் துக்கும், ரூ. 857.92 கோடியை சூரிய மின் உற்பத்தித் திட்டத்துக்கும் திருப்பிவிடப்பட்டது. இது அப்பட்டமான முறைகேடு. (ஆதாரம்: நாடாளுமன்றத்தில் 2.1.2018இல் இணை அமைச்சர் **விஜய் சாம்ப்ளா** தந்த தகவல்)

**உயர் கல்வி நிதி வெட்டு**

தலித் மாணவர்கள் உயர் கல்விக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் காங்கிரஸ் ஆட்சி காலத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017-18ஆம் ஆண்டு இத்திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டில் 348 கோடி ரூபாயை அரசு குறைத்துவிட்டது. அதுவும் ஏற்கனவே 51,03,243 தலித் மாணவர்கள் இந்த உதவித் தொகைக் கிடைக்காமல் அவதிப்பட்டுக் கொண் டிருந்த சூழலில் ஒதுக்கப்பட வேண்டிய நிதியை மேலும் குறைத்தார்கள். உதவித் தொகைக் கிடைக்காத நிலையில் ஏராளமான தலித் மாணவர்கள் உயர் கல்வியை பாதியிலேயே கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

குடியரசுத் தலைவர் பதவிக்கு ராம்நாத் கோவிந்த் என்ற தலித் வேட்பாளரை நிறுத்தி, தலித் ஆதரவு நாடகம் நடத்தும் மோடி ஆட்சி யில் தலித் மக்களுக்கு பாதுகாப்பு இருக்கிறதா? அவர்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்படு கிறதா?

மிகவும் விளிம்பு நிலையில் உள்ள சமூகத் தினரான, தலித்துகள், பழங்குடியினர் மற்றும் மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அவர்களுக்கான முன் னுரிமை என்பது ‘பசு’விற்குக் கொடுப்பதைவிட குறைவேயாகும். தலித்துகள், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் குறித்து நாட்டிலுள்ள ஊடகங்கள் வாயே திறப்பதில்லை.

2014 பொதுத் தேர்தலின்போது பாஜக வெளியிட்ட தேர்தல் அறிக்கையையும் கடந்த காலங்களில் அது அமல்படுத்தியுள்ளவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே பாஜகவின் மோசமான ஆட்சியை நன்கு புரிந்துகொள்ள முடியும், ‘பாஜக மனிதர் மலத்தை மனிதர் சுமக்கும்

**விடுதலை இராசேந்திரன்**

கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்திட உறுதி பூண்டிருக்கிறது’ என்று தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது.

ஆனால், இந்த உறுதிமொழிக்கும் எதார்த்த நிலைக்கும் தொடர்பே கிடையாது. உண்மை யில், 2017-18இல் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், மனித மலத்தை சுமந்திடும் மனிதருக்கு மாற்று வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு பத்து கோடி ரூபாய் அளவிலிருந்து ஐந்து கோடி ரூபாயாக, அதாவது பாதியாகக் குறைக்கப்பட்டுவிட்டது. 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி நாட்டில் உலர் கழிப்பிடங்கள் 26,07,612 இருக்கின்றன. இதற்கு சுமார் 2 இலட்சம் சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் தேவை.

இத்துடன் இரயில்வே மற்றும் பொது இடங் களில் உள்ள கழிவறைகளைச் சுத்தம் செய் வோரையும் சேர்த்தால் இவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாகும். இவ்வாறு மலம் அள்ளும் தொழிலாளிக்கு மாற்றுப்பணி அளிப்பதற்காக ஒரு நபருக்கு ரொக்க ஊக்கத் தொகையாக 40 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட வேண்டும் என்று கணக்கிட்டால், மொத்தம் 800 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால் 2016 பிப்ரவரி 15 வரையிலும் 7,573 நபர்களுக்கு மட்டுமே மாற்றுப்பணி அளிக்கப்பட் டிருக்கிறது. 1,92,427 பேர் மாற்றுப்பணி எதுவும் அளித்திடாமல் நிர்க்கதியாய் விடப்பட்டிருக் கிறார்கள். மோடியின் ‘தூய்மையான பாரதம்’ திட்டத்தின் கீழ் எத்தனை உலர் கழிப் பிடங்கள் அகற்றப்பட்டிருக்கின்றன என்பதற்கான தரவு எதுவும் கிடையாது.

- *மனித மலத்தை மனிதர் சுமக்கும் இழிவுக்கு முற்றுப் புள்ளி வைக்க ஒதுக்கிய நிதி – பாதியளவில் குறைப்பு.*
- *மோடி பட்டம் பெறவில்லை என்ற உண்மையை வெளி உலகிற்கு மறைக்க ஆர்.டி.அய். சட்டமே திருத்தப்பட்டது.*
- *உயர் கல்விக்கான நிதியும் குறைக்கப்பட்டது.*

**‘ஆர்.டி.அய்.’ சட்டம் சீர்குலைவு**

ஊழல் அதிகார முறைகேடுகளை வெளிச்சத் துக்குக் கொண்டு வருவதற்கு மிகப் பெரும் ஆயுதமாகத் திகழ்வது 2005ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம். இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை சீர்குலைக்கும் அத்தனை முயற்சி களிலும் மோடி ஆட்சி செயல்பட்டிருக்கிறது.

- ஒரு கல்லூரியில் பட்டப் படிப்பு 3 ஆண்டு படித்தால் எவரும் பட்டம் பெறலாம். எத்தனை பேர் இப்படிப் பட்டம் பெற்றார்கள் என்ற தகவல் - தகவல்கள் அறியும் உரிமைச் சட்டம் வருவதற்கு முன்பே எளிதாகக் கிடைத்துதான் வந்தது. ஆனால் மோடி பிரதமரான பிறகு ஓர் அதிசயம் நடந்தது; அது என்ன தெரியுமா?
- 1978ஆம் ஆண்டு டெல்லி பல்கலைக் கழகத்தில் 3 ஆண்டு பட்டப் படிப்பை முடித்து பட்டம் பெற்றதாக மோடி நாடாளுமன்றத்தில் போட்டி யிடுவதற்கான வேட்பு மனுவில் குறிப்பிட் டிருந்தார். அவர் 1978இல் பட்டம் வாங்கியது உண்மையா? என்பதை அறிய அந்த ஆண்டு டெல்லி பல்கலையில் பட்டம் வாங்கியவர்கள் விவரங்களை குறித்த தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் ஒருவர் கேட்டார். தகவல் ஆணையம் தகவல் தர மறுக்கவே, தகவல் கேட்டவர் மேல்முறையீடு செய்தார். தகவல் ஆணையர் தகவல் தர உத்தரவிட்டார். தகவல் தெரிவிக்க முடியாது என்று டெல்லி பல்கலைக் கழக நிர்வாகம், டெல்லி உயர்நீதி மன்றத்தில் தகவல் ஆணையருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தது. வழக்கில் வாதாட மூத்த வழக்கறிஞர்கள் அரசு செலவில் நியமிக்கப் பட்டனர். டெல்லி பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் பற்றிய விவரங்களை வெளியிடத் தேவையில்லை என்று தகவல் பெறும் உரிமைச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. மோடி உண்மையில் பட்டம் வாங்கினாரா என்ற தகவல் வெளிப் படுத்த முடியாத நாட்டின் இரகசியமாக்கப் பட்டது.
- மோடி பிரதமரானவுடன் தலைமை தகவல் அதிகாரி பதவி காலியாக இருந்தது. அந்தப் பதவிக்கு அதிகாரியை நியமிக்காமல் மோடி ஆட்சி கிடப்பில் போட்டது. டெல்லி உயர் நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் தலையிட்டு உத்தரவிட்ட பிறகே 10 மாத இடைவெளிக் குப் பிறகு தலைமை ஆணையாளர் நியமிக்கப்பட்டார். அந்த 10 மாத காலமும் மேல்முறையீட்டுக்கு வந்த அந்த விண்ணப் பங்களும் கிடப்பிலேயே போடப்பட்டன. தகவல் பெறும் ஆணையத்தில் பதவிகள் காலியான போதெல்லாம் நீதிமன்றங்கள் தலையீட்டுக்குப் பிறகே மோடி ஆட்சி அதிகாரிகளை நியமித்தது குறிப்பிடத்தக்கது. பல மாநிலங்களில் தகவல் ஆணையர் பதவிகள் நிரப்படுவதே இல்லை. 2016ஆம் ஆண்டு காலியான பதவிகளுக்கு விண்ணப் பங்கள் கேட்டு விளம்பரம் தந்தார்கள். அவ்வளவுதான்; பதவிகளை நிரப்பும் முயற்சிகள் ஏதும் எடுக்கப்படவில்லை.
- தகவல் கேட்டு விண்ணப்பித்தவர் இறந்து விட்டால் தகவல் தர வேண்டிய அவசிய மில்லை என்று 2017இல் ஒரு திருத்தம் கொண்டு வந்தது மோடி ஆட்சி. இதனால் தகவல் வெளிவந்துவிடக் கூடாது என்று நினைக்கும் மோசடிப் பேர் வழிகள், தகவல் கேட்போரை தீர்த்துக் கட்டத் தொடங்கினர்.
- தகவல் கேட்டு மேல் முறையீடு செய்தவர்கள், விரும்பினால் முறையீட்டைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்று மோடி ஆட்சி சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்தது. இதனால் மேல்முறையீடு செய்தவர்களை மிரட்டி இலஞ்சம் கொடுத்து, விண்ணப் பத்தைத் திரும்பப் பெற வைக்கும் முயற்சிகள் தொடங்கின.
- தலைமை தகவல் ஆணையர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு இணையாகக் கருதப் பட்டு தலைமை நீதிபதிக்கு உரிய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மோடி ஆட்சி, அமைச்சரவையைக் கூட்டி விவாதிக்காமலே தலைமை தகவல் ஆணையரின் ஊதியத்தைக் குறைத்தது.
- ஆணையம், அனைத்து தகவலையும் ‘டிஜிட்டல்’ மயமாக்கியது. ஒளிவு மறை வின்றி எல்லா தகவல்களையும் கணினியைப் பயன்படுத்தி பார்க்கலாம்; இதைத் தடுப்பதற்காக ‘அட்மின் லாக் இன்’ என்ற முறையைக் கொண்டு வந்து தகவல்களை பதிவிறக்கம் செய்ய முடியாமல் மோடி ஆட்சி தடுத்து விட்டது.
- தகவல் பெறும் உரிமை சட்டத்தைப் பயன் படுத்தி ஊழல் முறைகேடுகளை அம்பலப் படுத்தி வந்த சமூக செயல்பாட்டாளர்கள் 70 பேர் வரை கொலை செய்யப்பட்டார்கள். இந்த அச்சுறுத்தலைத் தடுக்க முந்தைய காங்கிரஸ் தலைமையிலான 15ஆவது நாடாளுமன்றம், 2014 மே மாதத்தில் தகவல் பெறுவோர் பாதுகாப்புச் சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது. அதற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதலும் கிடைத்தது. தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மோடி ஆட்சி சட்டத்தை இதுவரை கெசட் டில் வெளியிடவில்லை. நடைமுறைக்கு வராத சட்டமாக மோடி ஆட்சி மாற்றி விட்டது. கடைசியாக 2018ஆம் ஆண்டு மே மாதம் ஒரு தகவல் பெறும் சமூக செயல் பாட்டாளர் படுகொலை செய்யப்பட்டார். நிறைவேற்றப்பட்ட சட்டத்தை முடக்கிய மோடி ஆட்சி பிறகு அந்த சட்டத்தை பலவீனமாக்க மேலும் பல திருத்தங்களைக் கொண்டு வந்து, அதை பொது மக்கள் விவாதத்துக்குக் கொண்டு வராமலேயே மூடி மறைத்து மே 11, 2015இல் நாடாளுமன்றத்தில் திருத்தப்பட்ட மசோதாவை திடீரென்று அறிமுகப்படுத்தியது.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளும் மூன்றாம் கட்டப்பயண விவரம்

***கழகப் பணிகளை தீவிரப்படுத்தவும் கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்கம்', 'நிமிர்வோம்' ஏட்டுக்கு உறுப்பினர்கள் சேர்ப்பது குறித்து ஆராயவும், கழகப் பொறுப்பாளர்கள், கழகத் தோழர்களை சந்திக்க சுற்றுப் பயணம் வருகிறார்கள்.***

*01.12.2021 புதன்கிழமை : காலை 10.00 மணி: தர்மபுரி மாவட்டம் - மதிய உணவு,*

*மாலை 4.00 மணி: கிருட்டிணகிரி இரவு தங்கல்*

*02.12.2021 வியாழக்கிழமை : காலை 10.00 மணி வேலூர் மாவட்டம் மதிய உணவு*

*மணல் 06.00 மணி: சங்கராபுரம் (கள்ளக்குறிச்சி மாவட்டம்.)*

*03.12.2021 - வெள்ளிக்கிழமை : காலை 10.00 மணி: விழுப்புரம் மாவட்டம்.*

*மூன்றாம் கட்ட பயணம் நிறைவு. நான்காம் கட்ட பயண விபரம்.*

*12.12.2021 - ஞாயிறு : காலை 10.00 மணி ஈரோடு தெற்கு மாவட்டம் - மதிய உணவு, மாலை 4.00 மணி: கரூர் மாவட்டம்*

*தூத்துக்குடி. திருநெல்வேலி. கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்கள் பின்னர் அறிவிக்கப்படும்*

# திராவிடர் கழக செயல்பாட்டாளர் ஈரோடு பிரகலாதன் நினைவேந்தல் நிகழ்வு கழக சார்பில் நடந்தது



*மறைந்த திராவிடர் கழக ஈரோடு மண்டலத் தலைவர் பெரியார் தொண்டர் ப.பிர கலாதன் நினைவேந்தல் கூட்டம், 21.11.2021 அன்று மாலை 6:30 மணியளவில் ஈரோடு குருவரெட்டி யூர், தந்தை பெரியார் திடலில் நடைபெற்றது.*

*ஈரோடு வடக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் நாத்திகஜோதி கூட்டத்திற்கு தலைமை வகித்தார். கு.வேல் முருகன் (அம்மா பேட்டை ஒன்றிய செய லாளர்), காவை ஈஸ்வரன் (தலைமை செயற்குழு உறுப்பினர்), ப. ரத்தின சாமி (மாநில அமைப்பு செயலாளர்), சு. துரைசாமி (மாநில பொருளாளர்), ப. சத்தியமூர்த்தி (திராவிடர் கழகம்), வேணுகோபால் (மாவட்ட செயலாளர்), அரங்க-இராசகோபால் (வழக்குரைஞர்), சாமிநாதன் (நாமக்கல் மாவட்ட தலைவர்), பெரியநாயகம் (அம்மாபேட்டை பேரூர் கழக செயலாளர் திமுக.), வெ.கிருஷ்ணமூர்த்தி (வழக்குரைஞர்- பாமக), வேங்கை பொன்னுசாமி (தமிழ் புலிகள் கட்சி மாவட்ட செயலாளர்), விஸ்வநாதன் (முன்னாள் ராணுவ வீரர் குருவை) ஆகியோர் நிகழ்விற்கு முன்னிலை வகித்தனர்.*

*கழக பொருளாளர் திருப்பூர் துரைசாமி, கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர்.*

*இறுதியாக , பிரகலாதன் படத்தை திறந்து வைத்து, நினைவேந்தல் உரையை கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை நிகழ்த்தினார். ந.கிருஷ்ணமூர்த்தி (திக), கூட்டத்திற்கு நன்றி கூறினார்.*

*கூட்டத்திற்கு, சூரியகுமார் (சேலம் மாவட்ட தலைவர்), சூலூர் பன்னீர்செல்வம், கோபி நிவாசு, மேட்டூர் மார்ட்டின், ஈரோடு பாலு, மணிகண்டன் திக, தட்சிணா மணிமாறன் திக, பாலசுப்பிரமணி திக, பிரகலாதன் துணைவியார் மாதம்மாள், சகோதரிகள் ஈஸ்வரி, ஜீவா, ஜீவரசன், ஈரோடு பெரியசாமி திமுக, குருவை ராமன் திலீபன், சோ.மகேசுவரி, உமா திலீபன், இசைப்பிரியா ஆகியோர் உட்பட ஈரோடு, நாமக்கல் பகுதி கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.*

*திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு வடக்கு மாவட்டம் குருவை பகுதி சார்பாக நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.*

# கோவை மாவட்டக் கழக முடிவுகள்

*7.11.2021 இரவு 8 மணி அளவில் கோவை மாவட்ட மாநகர பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் Conference call மூலம் நடைபெற்றது. இந்த கலந்துரை யாடல் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்:*

1. *1957 நவம்பர் 26இல் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை கொளுத்திய போராளிகளின் நினைவை போற்றும் வகையில் வண்ண சுவரொட்டி அடித்து கோவை மாவட்டம் முழுதும் பரவலாக ஒட்டுதல்.*
2. *நவம்பர் 26 2021 அன்று கோவை மாவட்ட கழகத் தோழர்கள் ஒன்றுகூடி ஜாதி ஒழிப்பு போராளிகளை நினைவு கூர்ந்து உறுதிமொழி ஏற்று வீர வணக்கம் செலுத்துவது.*
3. *வார ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் 250 சந்தாவை தோழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து சேர்த்து அதற்கான தொகையையும் முகவரி பட்டியலையும் 2021 டிசம்பர் இறுதிக்குள் தலைமையிடம் ஒப்படைப்பது.*

# சூர்யாவுக்கு மிரட்டல் : பா.ம.க. பிரமுகர் மீது நடவடிக்கை கோரி சென்னை, மதுரையில் கழக சார்பில் மனு

***ஜெய்பீம்' படத் தயாரிப்பாளர் நடிகர் சூர்யாவுக்கு எதிராக வன்முறை மிரட்டல் விடுத்த பா.ம.க. – மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி, சென்னை, மதுரையில் கழகத் தோழர்கள் காவல்துறையில் மனு அளித்தனர்.***

**சென்னையில் :** *ஜாதியை பிரதானமாக வைத்தே இயங்கும் பாமக தரப்பில் அதிக மிரட்டல்கள் 'ஜெய்பீம்' படத் தயாரிப்பாளர் நடிகர் சூர்யாவிற்கு வந்து கொண்டே உள்ளன. குறிப்பாக பாமக மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் பழனிச்சாமி, "நடிகர் சூர்யா அவர்களை எட்டி உதைக்கும் இளைஞருக்கு ஒரு இலட்சம் தருவதாகவும், சூர்யா தரை வழியாக எங்கும் பயணம் செய்யமுடியாது, வான் வழியாக தான் செல்ல முடியும்" என்றும் மிரட்டியுள்ளார்.*

*சமூக பதட்டத்தையும், வன்முறையையும் , ஜாதிய மோதலையும், இளைஞர்கள் மத்தியில் ஜாதிய வன்மத்தை விதைக்கும் வகையிலும், திட்டமிட்டு உள் நோக்கத்துடன் பேசியுள்ளார். இதற்கான, உரிய நடவடிக்கை எடுக்குமாறு, சென்னை, காவல் ஆணையர் அலுவலகத்தில், சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி தலைமை யில் காலை 11 மணியளவில் மனு அளிக்கப்பட்டது. ஆணையர் தரப்பில் CSR ம் கொடுக்கப்பட்டுள்ளது.*

*சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, மாவட்டத் தலைவர் வேழவேந்தன், தென் சென்னை மாவட்ட துணை அமைப்பாளர் சுகுமார், மயிலை இராவணன், சிவா ஆகியோருடம் சென்னை கழக தோழர்கள் உடன் சென்றிருந்தனர்.*

**மதுரையில் :** *பாமக மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் பழனிச்சாமி மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி 16.11.2021 காலை தென்மண்டல ஐ.ஜி. அலுவல கத்தில் மதுரை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் புகார் அளிக்கப்பட்டது..*

*தோழமை அமைப்புகளான விடுதலை சிறுத்தைகள், தமிழ்தேச மக்கள் முன்னணி, தந்தை பெரியார் திராவிடர் கழகம் புரட்சிகர இளைஞர் முன்னணி வழக்கறிஞர் சிவா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

# ஜெய் பீம் – பலருக்கும் துயரம், சிலருக்கோ சிரிப்பு

*ஜெய் பீம் சர்ச்சைகள் குறித்து 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' ஆங்கில நாளேட்டில் (21.11.2021) தொடர்ந்து எழுதி வரும் அருண் ராம், எழுதியுள்ள கட்டுரையின் சுருக்கமான கருத்துக்கள்.*

*பார்வையாளர்களின் எண்ணிக்கையில் இதுவரை ரேட்டிங்கில் (IMDB) முதல் நிலையில் இருந்த 'தி ஷாவ்ஷங்க் ரிடம்சன்' (The Shawshank Redemption) மற்றும் 'தி காட்பாதர்' (The Godfather) படங்களை பின்னுக்குத் தள்ளிவிட்டு ரேட்டிங்கில் முதலிடத்திற்கு வந்திருக்கிறது 'ஜெய் பீம்' திரைப்படம். பார்வையாளர்களின் ஒருமித்த உணர்வுகளை படம் பிரதிபலிப்பதே இந்த வெற்றிக்கான காரணம். கரங்களை கட்டிக்கொண்டு இந்தப் படங்களை பார்க்க முடியாது. கரங்களை நெஞ்சில் தொட வைக்கும் படம் இது. கணவனை கொலை செய்தவர்களிடம், 'அதற்கு ஈடாக பணத்தை வாங்கிக் கொண்டால் என் வயிற்றில் வளரும் குழந்தைக்கு என் அப்பா யார் என்று கேட்டால், அதற்கு நீங்கள் தரும் பணம் பதில் சொல்லுமா?' என்று கேட்கிறார் செங்கேனி. இதை நான் எழுதுவது ஒரு திரைப்பட விமர்சனமாக அல்ல. இப்போது தலைதூக்கி நிற்கும் ஜாதி வெறி அரசியல் பார்வையில், இதை நான் எழுதுகிறேன்.*

*முதலில் படம் உண்மை சம்பவத்தை வைத்து எடுக்கப்பட்டதா ? என்றால், ஆம். ஆனால் படத்தில் வரும் ஒவ்வொரு காட்சியும் உண்மையானதா ? என்ற கேள்விக்கு பதில் இல்லை. உலக புகழ் பெற்ற 'காந்தி' திரைப்படத்தை உருவாக்கிய 'அட்டன் பரோ' படத்தின் முகப்புரையாக இவ்வாறு கூறுவார். "ஒரே கதையில் எந்த ஒரு மனிதனின் வாழ்க்கையையும் உண்மையாக காட்டி விட முடியாது. ஆனால் அந்த மனிதனின் ஆழமான உணர்வுகளை பதிவு செய்ய முடியும். அவரின் இதயத்தை திறந்து காட்ட முடியும்." ஆனால், படம் உணர்த்தும் சமூக அவலங்களை விரும்பாதவர்கள் சுலபமாக எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு சில காட்சிகளே போதுமானது.*

*சித்திரவதை செய்த ஆய்வாளருக்கு சூட்டப்பட்ட பெயர், சில வினாடிகள் மட்டுமே காட்டப்படும் காலண்டர். இவைகளே இவர்களின் எதிர்ப்புக்குப் போதும். கீழ் ஜாதி என்று ஒதுக்கி வைக்கப்பட்டு, கொடுமைக்குள்ளான மக்களின் வலியை விட இந்தக் குறியீடுகளே எதிர்ப்பாளர்களுக்கு முக்கியமானது.*

*ஜாதி எதிர்ப்பைப் பேசும் படங்களுக்கு ஆதிக்க ஜாதி குறியீடுகளைப் பயன்படுத்துவதில் தவறு ஏதும் இல்லை.*

*படம் பார்ப்பவர்களுக்கு துயரம் தொண்டையை அடைக்கிறது, இதயம் கனக்கிறது. ஆனால், படத்தை எதிர்ப்பவர்களோ, நகைச்சுவைகளை அள்ளிவிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். படத்துக்கும், படத்தின் தலைப்பிற்கும் என்ன தொடர்பு இருக்கிறது ? என்று கேட்கிறார் டாக்டர் கிருஷ்ணசாமி. மும்மொழி திட்டத்தை எதிர்க்கும் சூரியா, அய்ந்து மொழிகளில் இந்த திரைப்படத்தை வெளியிட்டது ஏன் ? என்று கேட்கிறார் எச். இராஜா. இதற்கு சூரியா மவுனமாக 'லைக்' போட்டுவிட்டார். இதுவே அவரது பதில்.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 25th November 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN